


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 151 | 4 Pages | 30.12.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 151 | 4 பக்கங்கள் | 30.12.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்**

**விளக்கம்:**
பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடையவாழ்க்கை(பலவளமும்) இருப்பது போல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டு விடும்.

## ஜெலென்ஸ்கி உடனான சந்திப்புக்கு முன் புதினுடன் பேசிய டிரம்ப்




வாஷிங்டன், டிச.30

உக்ரைன்ரஷியா இடையே போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளையில், போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார்.

அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 20 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாக உக்ரைன்அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடந்தது. நீண்ட இழுபறிக்கு பின் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பெரும்பாலான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக நிருபர்களிடம் பேசிய ஜெலன்ஸ்கி, இதனை உறுதி செய்தார். அவர் நிருபர்களிடம் கூறும்போது, 'அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் டிரம்பை சந்திக்கிறேன். 20 நிபந்தனைகளில் 90 சதவீத நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்த சந்திப்பின் போது பொருளாதார ஒப்பந்தம் குறித்து விவாதிக்கப்படும். பிராந்திய பிரச்சினைகளையும் எழுப்ப உள்ளோம். முக்கியமான பிரச்சினைகளைப் பொறுத்தவரை, டான்பாஸ் மற்றும் சபோரிஜியா அணுமின் நிலையம் குறித்து நாங்கள் விவாதிப்போம்,மேலும்பிறபிரச்சினைகளையும்நாங்கள்நிச்சயமாகவிவாதிப்போம்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜெலென்ஸ்கி உடனான சந்திப்புக்கு முன் ரஷிய அதிபர் புதினுடன் டிரம்ப் தொலைபேசியில் பேசினார். இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தனது ட்ருத் சோசியல் பக்கத்தில், "உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடனான எனது சந்திப்புக்கு முன்பு, இன்று மதியம் 1 மணிக்கு, , ரஷிய அதிபர் புதினுடன் ஒரு நல்ல மற்றும் மிகவும் பயனுள்ள தொலைபேசி அழைப்பை மேற்கொண்டேன்" என்று தெரிவித்துள்ளார்.

## இரவு ஸ்பீக்கரில் அதிக சத்தத்துடன் பாட்டு கேட்ட பக்கத்து வீட்டுக்காரர்; துப்பாக்கி சூடு நடத்திய பெண்



மாஸ்கோ, டிச.30

ரஷியாவில் இரவு ஸ்பீக்கரில் அதிக சத்தத்துடன் பாட்டு கேட்ட பக்கத்து வீட்டுக்காரரை எச்சரிக்க பெண் துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரவு நேரத்தில் அதிக சத்தத்துடன் பாட்டு கேக்க வேண்டாம் என பக்கத்து வீட்டுக்காரரை அந்த பெண் பல முறை எச்சரித்துள்ளார். ஆனாலும்,அந்த நபர் தொடர்ந்து அதிக சத்தத்துடன் பாட்டு கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த பெண் மது போதையில் இருந்தபோது தனது வீட்டில் இருந்த ஏகே 47 ரக துப்பாக்கியால் பக்கத்து வீட்டுக்காரரின் வீட்டு ஜன்னலை நோக்கி சரமாரியாக சுட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. இந்த துப்பாக்கி சூட்டில் யாருக்கும் காயம் ஏற்பட்டதா? உள்பட சம்பவம் குறித்த பிற விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

## இத்தாலி: தொண்டு நிறுவனம் மூலம் நிதி திரட்டல் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ரூ. 74 கோடி அனுப்பிய கும்பல்

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கும் 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, இஸ்ரேல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர் இடையே போர் மூண்டது. கடந்த 2 ஆண்டுகளாக போர் நீடித்து வந்தது. இந்த போரில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து அமெரிக்கா தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.

இதனிடையே, இந்தபோரின் போது காசா முனையில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக பல்வேறு நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றது. மேலும், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு உதவ பல்வேறு தொண்டு நிறுவனங்கள் நிதி திரட்டின.

இந்நிலையில்,இத்தாலியில்தொண்டுநிறுவனங்கள்மூலம்திரட்டப்பட்ட நிதி ஹமாஸ் ஆயுதக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்தில் உள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளுக்காக நிதி திரட்டுவதாக கூறி இத்தாலியின்ஜினோயா, மில்லன் போன்ற நகரங்களில் தொண்டு நிறுவனம் கிளைகளை தொடங்கியுள்ளது. இந்த தொண்டு நிறுவனத்தில் மக்கள் கோடிக்கணக்கான பணம் நிதியாக கொடுத்துள்ளனர்.

அந்த நிதியை தொண்டு நிறுவனத்தை சேர்ந்தவர்கள் ஹமாஸ் ஆயுதக்குழுவிற்கு கொடுத்துள்ளனர். இந்திய மதிப்பில் 74 கோடி ரூபாய் நிதி திரட்டி அதை பல்வேறு சிக்கலான வங்கிக்கணக்குகள் மூலம் ஹமாஸ் ஆயுதக்குழுவின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போலீசார் , இத்தாலியில் பாலஸ்தீன இயக்கத்தின் தலைவர் முகமது ஹனோன் உள்பட 9 பேர் கொண்ட கும்பலை கைது செய்துள்ளனர். மேலும் , ஹமாசுக்கு நிதி உதவி அளித்த தொண்டு நிறுவனத்தின் சொத்துக்களையும் முடக்கியுள்ளனர்.

# திமுக மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதி: முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சு



கோவை,

திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

மேற்கு மண்டல தி.மு.க. மகளிர் அணி மாநாட்டில் கூடியுள்ள மகளிரைப் பார்க்கும் போது, தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதியாகத் தெரிகிறது. எப்போதுமே தி.மு.க. தேர்தல் அறிக்கையே ஹீரோ. வரும் சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெறப் போகிறோம். அது உறுதி. பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்; பெண்களின் வெற்றியே நாட்டின் வெற்றி. திரண்டுள்ள மகளிர் அணியைப் பார்க்கும் போதே பவர் ஃபுல்லாக இருக்கிறது. நிறைய இளம்பெண்கள் கூட்டத்தில் பங்கேற்றதைப் பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. கூட்டம் பவர் ஃபுல்லாக மட்டும் இல்லை; உமன் பவரால் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வருவதை உறுதி செய்வதாக உள்ளது. தொடக்கம் முதலே திராவிட இயக்கத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றார்கள். பெண்கள் படிக்கக் கூடாது, அடுப்படி தாண்டக் கூடாது என்று கூறி அடிமைப்படுத்தப்பட்டனர். அதையெல்லாம் உடைத்தெறிந்தது திராவிட இயக்கம்தான்.

பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்; பெண்களின் வெற்றியே நாட்டின் வெற்றி. பெரியார் கட்டியெழுப்பிய தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. திராவிட இயக்கத்தால் பெண்கள் அடைந்த வளர்ச்சியை மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும்.உள்ளாட்சியில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. தான். உள்ளாட்சி அமைப்புகள் போல, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். பெண்களுக்கு இடம் கிடைப்பதை பாஜக விரும்பவில்லை.

உரிமைத்தொகை திட்டம் நிறைய பெண்களுக்கு நம்பிக்கையைத் தந்துள்ளது. 1.30 கோடி மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்கி வருகிறோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இதுவரை 28 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளோம். பெண்களின் கல்வி உரிமை மற்றும் சம உரிமைக்காக பாடுபடுவது திராவிட இயக்கம். கடந்த வாரம் ராஜஸ்தானில் ஒரு கிராமத்தில் பெண்கள் செல்போன் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் செல்போன்களை அசெம்பிள் செய்வதே பெண்கள்தான். தமிழ்நாட்டில்தான் பெண் மேயர்கள் அதிகமாக உள்ளனர்.தேவையே இல்லாத நிபந்தனைகளுடன் 33 சதவீத இடஒதுக்கீட்டு மசோதாவை நாடாளுமன்றத்தில் பாஜக அரசு நிறைவேற்றியது.

முதல்வரானதும் எனது முதல் கையெழுத்து 'விடியல்' பயணத் திட்டத்துக்குத்தான். புதிய வாய்ப்புகளைத் தேடி பெண்கள் ஏராளமானோர் விடியல் பயணம் மேற்கொள்கிறார்கள். பெண்கள் வேலைக்கு சென்றாலும், நடைமுறையில் இருக்கும் பெரிய சிறை சமையல் அறைதான். மகளிர்சுமையை குறைக்கும் திட்டமாக காலை உணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. பெண் கல்விக்கு தி.மு.க. அரசு முக்கியத்துவம் தந்துள்ளது. கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. 100 வேலை திட்டத்தை 125 நாட்களாக மத்திய அரசு உயர்த்தியதாக பச்சை பொய்யை எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார். சங்கிகளே வெட்கப்படும் அளவுக்கு எடப்பாடி பழனிசாமி முட்டுக்கொடுக்கிறார். கமலாலய அறிக்கையை அதிமுக லெட்டர் பேடில் எடப்பாடி பழனிசாமி வெளியிடுகிறார்" இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னை கலெக்டர் அலுவலகம் அருகே அகில இந்திய ஜனநாயக கட்சியினர் ஆர்ப்பாட்டம்



சென்னை பாரிமுனை ராஜாஜி சாலையில் அமைந்துள்ள சென்னை கலெக்டர் அலுவலகம் அருகே கிறிஸ்தவர்களுக்கு 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கக்கோரியும், பஞ்சமி நிலங்களை மீட்டு தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு நிலம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சியினர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி தேசிய தலைவர் டாக்டர் வி.எஸ்.ஐசக் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தேசிய பொதுசெயலாளர் ஸ்டீபன்சன் குமார், தென்மாநில செயலாளர் டேவிட்குட்டி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.ஆர்ப்பாட்டத்தில்அரசுகவனத்தை ஈர்க்கும் வகையில் தங்களுடைய கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். மேலும் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் ஆட்சியில் பங்கு தரும் கட்சியுடனே கூட்டணி என்றும் ,100 நாள் வேலைதிட்டத்தை ரத்து செய்ததைஆர்ப்பாட்டத்தின்மூலம்வன்மையாக கண்டிப்பதாக அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி தேசிய தலைவர் டாக்டர் வி.எஸ்.ஐசக் தெரிவித்தார்.

## சுங்கக்கட்டணம் செலுத்தாததால் அரசு பஸ் சிறை பிடிப்புநள்ளிரவில் 2 மணி நேரம் பயணிகள் அவதி



நெல்லை,

குமரி மாவட்டம் நாகர்கோவிலில் இருந்து நெல்லைக்கு தினமும் நான்குவழிச்சாலை வழியாக ஏராளமான அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று இரவு நாகர்கோவிலில் இருந்து நெல்லை நோக்கி அரசு பஸ் புறப்பட்டு வந்து கொண்டிருந்தது.நள்ளிரவு நேரத்தில் நாங்குநேரி சுங்கச்சாவடியை பஸ் வந்தடைந்தபோது, அதில் சுங்கக்கட்டணம் செலுத்துவதற்கான போதுமான பணம் பஸ்சில் ஒட்டப் பட்டிருந்த பாஸ்ட்டேக் அட்டையில் இல்லை என்று கூறப்படுகிறது.

இதனால் சுங்கச்சாவடி ஊழியர்கள் பஸ்சை மேற்கொண்டு செல்ல அனுமதிக்காமல் தடுத்து சிறைபிடித்தனர். உடனடியாக பஸ் கண்டக்டர், போக்குவரத்து கழக மேலாளர் மற்றும் உயர் அதிகாரிகளை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால், நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், எந்தவொரு அதிகாரியும் அழைப்பை ஏற்கவில்லை.

அதிகாரிகளின் இந்த அலட்சியத்தால் கண்டக்டர் செய்வதறியாது திகைத்து போனார். மேலும் பயணிகளில் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண்கள் என பலதரப்பட்டவர்களும் இருந்தனர். நள்ளிரவில் பஸ் நிறுத்தப்பட்டதால் அவர்கள் கடும் அவதிக்குள்ளாகினர். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக பஸ் சுங்கச்சாவடியிலேயே நின்றது.

ஒருகட்டத்தில் பஸ்சில் இருந்த பயணிகள் ஆவேசம் அடைந்து வாக்குவாதம் செய்ததால், கண்டக்டர் வேறு வழியின்றி தனது சொந்தப் பணத்தை செலுத்தி பஸ்சை அங்கிருந்து எடுக்க நடவடிக்கை எடுத்தார். அதன்பின்னரே, 2 மணி நேர தாமதத்திற்கு பிறகு பஸ் நெல்லை நோக்கிப் புறப்பட்டது. இது போன்ற சம்பவங்கள் இனி நடக்காமல் இருக்க போக்குவரத்து கழகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



விருதுநகர் மாவட்டம் நெடுஞ்சாலைத்துறையில் விருதுநகர் நெடுஞ்சாலைத்துறைகட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டக் கட்டுப்பாட்டில் உள்ள இராஜபாளையம் (நெ) க(ம)ப உட்கோட்ட சாலையான இராஜபாளையம் அய்யனார்கோவில்சாலை செண்பகதோப்புசாலை கி.மீ 0/0 14 மற்றும் ஏனைய சாலைகளில் முடிவுற்றசாலைப்பணிகளைதிருமதி.மு.பாக்யலட்சுமிகோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப விருதுநகர் அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உடன் திரு.எஸ்.அனந்தகுமார் உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப இராஜபாளையம் இருந்தார்.

## வீட்டு வேலை செய்ய சொன்ன தாய்... பிளஸ்2 மாணவி எடுத்த விபரீத முடிவு



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்த கீழக்கொந்தை கிராமத்தை சேர்ந்தவர் சுரேஷ். இவரது மனைவி சாந்தி.

இந்த தம்பதியின் மூத்த மகள் சுபஸ்ரீ (17 வயது). இவர் சிந்தாமணி அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார்.

தற்போது அரையாண்டு தேர்வு முடிந்து பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டுள்ளதால் சுபஸ்ரீ வீட்டில் இருந்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று காலையில் சாந்தி வீட்டில் உள்ள துணியை துவைக்க வேண்டும் என்றும், சமைக்க வேண்டும் என்றும் சுபஸ்ரீயிடம் கூறியுள்ளார். இதனால் மனமுடைந்த சுபஸ்ரீ வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த விக்கிரவாண்டி போலீசார் சுபஸ்ரீயின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# கோயம்புத்தூர் மாவட்டத்தில் மகளிர் வாழ்வாதார பண்ணைத் திட்டம்

## செய்தியாளர் பயணத்தின் போது மாவட்ட கலெக்டர் ஆய்வு



கோயம்புத்தூர், டிச.30

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், நாயக்கன் பாளையம் ஊராட்சியில் ரங்கநாதபுரம் கிராமத்தில் செம்பருத்தி மகளிர் குழுவைச் சேர்ந்த மகளிர் வாழ்வாதார பண்ணைத் திட்டத்தின் கீழ் தலா ரூ.14000 மதிப்பீட்டில் 100 கோழிக்குஞ்சுகள் கொண்ட கோழிப்பண்ணை அமைத்துள்ளதை மாவட்ட கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது இச்செய்தியாளர் பயணத்தின்போது வட்டார இயக்க மேலாளர் குமுதா, உதவி திட்ட அலுவலர் அசோகன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்செய்தியாளர் பயணத்தின் போது மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், வாழ்வாதார பண்ணைத் திட்டத்தின் கீழ்; வட்டார அளவிலான கூட்டமைப்பின் மூலம் 589 பயனாளிகளுக்கு கோழி பண்ணைகள் அமைக்க ரூ.57.81 இலட்சம் மதிப்பில் நிதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயனாளிகள் அந்நிதியினை பயன்படுத்தி கோழிக் குஞ்சுகள், கூண்டுகள், கோழித் தீவனங்கள் போன்றவற்றினை கொள்முதல் செய்து கோழி வளர்த்து வருகின்றனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், நாயக்கன்பாளையம் ஊராட்சி, ரங்கநாதபுரம் கிராமத்தில் செம்பருத்தி மகளிர் குழுவைச் சேர்ந்த பத்திரம்மாள், லட்சுமி, புஷ்பா, ஆகியோர் வாழ்வாதார பண்ணைத் திட்டத்தின் கீழ் தலா ரூ.14000 மதிப்பீட்டில் 100 கோழிக்குஞ்சுகள் கொண்ட கோழிப்பண்ணை அமைத்துள்ளதை நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கோழியின் புரதம் பற்றியும் அதன் நாட்டு ரக உற்பத்தி அதற்கு மதிப்புக் கூட்டு பொருட்கள் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாய் பற்றியும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நாட்டு கோழி வளர்ப்பின் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஊக்குவித்து அவர்களுக்கு நல்லதொரு வருமானம் கிடைப்பதால் அவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. என மாவட்ட கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளி இலட்சுமி தெரிவித்ததாவது, பெரியநாயக்கன் பாளையம் வட்டாரம், நாயக்கன்பாளையம் ஊராட்சி, ரங்கநாதபுரம் கிராமத்தில் செம்பருத்தி மகளிர் சுயஉதவிக்குழுவில் இருக்கிறேன். எங்கள் குழுவில் உள்ள 20 மகளிருக்கும் ரூ.9000 மதிப்பீட்டில் தலா 100 கோழிக் குஞ்சுகளும், ரூ.5000 மதிப்பீட்டில் கோழிக் கூண்டு மற்றும் தீவனங்களும் வழங்கப்பட்டது. தற்போது நாட்டு கோழிகளுக்கு சந்தையில் நல்ல விலை இருப்பதால், எங்களுக்கு கூடுதலாக வருமான கிடைத்து வருகின்றது. இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இதுபோன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் நன்றியினை என தெரிவித்தார்.



கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தாளக்கரை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசின் சாதனைகளை விளக்கி சிறு புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் கண்டு களித்தனர்.

# சேலம் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், டிச.30

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக் கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 520 மனுக்கள் வரப்பெற்றன. மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத்தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 11 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் இரா.பிருந்தாதேவி தெரிவித்தார்.

முன்னதாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், மாணவ, மாணவியர்களின் திறனை ஊக்குவிக்கும் வகையில் சமூக நீதி கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்காக நல்லோசை களமாடு நிகழ்ச்சியின் மூலம் நடத்தப்பட்ட ரங்கோலிப்போட்டி, ஓவியப்போட்டி, நாடகம், கதை, கவிதை, பாட்டுப்போட்டி, செஸ் மற்றும் கேரம் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற 59 மாணவ, மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள்.

மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்பில் பயின்று தேர்வு எழுதி வெற்றி பெற்ற 9 நபர்கள், மாவட்ட கலெக்டரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட வேலைவாய்ப்புத்துறை துணை இயக்குநர் செ.மணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சின்னுசாமி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் சுகந்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) ஜானகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 44-வது புதிய கிளை: கலெக்டர் துவக்கி வைத்தார்



தருமபுரி, டிச.30

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூரில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 44ஆவது புதிய கிளையினை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்ததாவது:

தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள் தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. தருமபுரியில் இருந்து பென்னாகரம் செல்லும் வழியில் நல்லம்பள்ளி வட்டத்திற்கு உட்பட்ட இண்டூரில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 44 ஆவது புதிய கிளை துவங்க முடிவு செய்யப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அவர்களிடம் முன் அனுமதி பெறப்பட்டும், இந்திய ரிசர்வ் வங்கியிடம் உரிமம் பெறப்பட்டு இன்று தொடங்கப்பட்டுள்ளது.

இப்புதிய கிளை இண்டூரிலிருந்து பாப்பாரப்பட்டி செல்லும் சாலையில் தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்க ஏதுவாக பாதுகாப்பு பெட்டகங்கள், பாதுகாப்பு கதவுகள், வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம் மற்றும் நவீன வசதிகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கிளை துவங்குவதன் மூலம் இண்டூர் பகுதி மக்கள் மற்றும் இக்கிளையுடன் இணையவுள்ள 4 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கத்தை சேர்ந்த விவசாயிகள் என 30 கிராமங்களை சேர்ந்த 15,000க்கும் மேற்பட்ட பொது மக்கள் பயன் பெறுவர்கள். மேலும், இக்கிளையானது தருமபுரி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கியின் 44வது கிளை என்பதை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்தார்.

எனவே, கூட்டுறவுத்றை மூலம் வழங்கப்படும் அனைத்து கடன்கள் மற்றும் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்தார்கள்.

மேலும், இண்டூர் புதிய கிளையின் வாடிக்கையாளர்களுக்கு வைப்பு தொகை இரசீதுகளையும், வங்கி சேமிப்பு கணக்கு புத்தகங்களையும் மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், பென்னாகரம் பேரூராட்சி மன்ற தலைவர் வீரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் எஸ்.மலர்விழி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, தருமபுரி சரகம் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் ந.விஷ்ணு பிரியா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் கருனாகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



கிருஷ்ணகிரி, டிச.30

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 571 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர், தாட்கோ துறை சார்பாக, தேன்கனிக் கோட்டை வட்டம், நாச்சிப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பிரேமா க/பெ.வெங்கடேஷ்க்கு, நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டத்தின் கீழ், ரூ.5 இலட்சம் மானியத்தில் (மொத்த தொகை ரூ.15 இலட்சம்) வாங்கப்பட்ட நிலத்திற்கான பத்திரத்தை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ், துணை ஆட்சியர் (பயிற்சி) சௌமியா, மாவட்ட பொது மேலாளர் (தாட்கோ) வேல்முருகன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு 8-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி: கலெக்டர் தகவல்



நாமக்கல், டிச.30

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு 8வது சுற்று கோமாரிநோய் தடுப்பூசிப்பணி 21 நாட்கள் நடைபெறுகிறது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 2,80,600 கால்நடைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட உள்ளது. பொதுமக்கள் அனைவரும் அந்தந்தப் பகுதி கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவர்களால் குறிப்பிடப்படும் தேதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு தங்கள் கால்நடைகளை கொண்டு சென்று கோமாரி நோய் தடுப்பூசிபோட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், அந்தந்தப் பகுதி கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் முன்கூட்டியே தடுப்பூசி போடப்படும் விவரம் தெரியப்படுத்தப்படும்.

இத்தடுப்பூசிப் பணிக்காக மாவட்டம் முழுவதும் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்டு 105 தடுப்பூசி பணி குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று அந்தந்த கிராமங்களிலேயே கோமாரி நோய் தடுப்பூசிப்பணிகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவே, நாமக்கல் மாவட்ட விவசாய பெருமக்கள் நான்கு மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, எருமை ஆகிய கால்நடைகளை அழைத்துச் சென்று ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிடப்பட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் முகாம்களில் தங்களது

கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி தவறாது போட்டுக்கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இம்முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் வீ.பழனிவேல், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்குன்றத்தில் 10 கிலோ கஞ்சா பறிமுதல்: கேரளா இளைஞர் கைது



திருவள்ளூர், டிச.30

ஒடிஸா மாநிலத்தில் இருந்து செங்குன்றம் பகுதிக்கு கஞ்சா கடத்தி விற்பனை செய்த இளைஞரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர் அவரிடமிருந்து இருந்து 10 கிலோ எடையுள்ள கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

ஆவடி காவல் ஆணையரகத்தில் வெளியிட்ட செய்தி குறிப்பு, ஒடிஸா மாநிலத்தில் இருந்து செங்குன்றம் பகுதிக்கு கஞ்சா கடத்தி விற்பனை செய்வதாக செங்குன்றம் மதுவிலக்கு அமலாக்கப் போலீஸாருக்கு நேற்று முன்தினம் (டிச.28) ரகசிய தகவல் வந்தது. இதையடுத்து காவல் ஆய்வாளர் சசிகுமார் தலைமையில் போலீஸார் அருகே தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அப்போது செங்குன்றம் மொண்டியம்மன நகர் சோதனை சாவடி அருகில் சந்தேகத்திற்கு இடமாக கையில் பையுடன் சென்று கொண்டிருந்த இளைஞரை போலீஸார் வழிமடக்கி விசாரணை நடத்தினர். அப்போது, அவர் முன்னுக்கு பின் முரணாக தகவல் தெரிவித்ததையடுத்து, அவர் வைத்திருந்த பையை போலீஸார் சோதனை செய்தனர். அதிலிருந்த 10 கிலோ எடையுள்ள கஞ்சா பொட்டலங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். பின்னர் இளைஞரை போலீஸார் பிடித்து காவல் நிலைய அழைத்து வந்து தீவிர விசாரணை நடத்தினர். அதில், அவர் கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டம் கருணாபுரம் பகுதியைச் சேர்ந்த அகில் (24) என்பவரும், இவர் ஒடிஸா மாநிலத்தில் இருந்து கஞ்சாவை விலைக்கு வாங்கி வந்து செங்குன்றம் மீஞ்சூர் மணலி எண்ணூர் அத்திப்பட்டு பகுதியில் விற்பனை செய்தது தெரியவந்தது. புகார் அடிப்படையில் போலீஸார் வழக்கு பதிந்து அகிலை கைது செய்து, பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# விருகம்பாக்கம் பகுதியில் பெண்ணை தகாத வார்த்தைகள் பேசி, செங்கல்லால் தாக்கிய நபர் கைது



சென்னை, டிச.30

சென்னை பெருநகர காவல், தி.நகர் காவல் மாவட்டத்தில் வசித்து வரும் 27 வயது பெண்ணிற்கு கடந்த 2020ம் ஆண்டு திருமணம் ஆகி, கருத்து வேறுபாடு காரணமாக கணவரை பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தற்போது நர்ஸ் ஆக வேலை செய்து வருவதாகவும், இராமாபுரத்தைச் சேர்ந்த அன்பு என்பவர் மேற்படி பெண்ணிடம் கடந்த 4 ஆண்டுகளாக பழகி வந்த நிலையில், சில தினங்களாக அவர் பேசுவதை தவிர்த்து வந்ததால், அப்பெண் கடந்த 27.12.2025 அன்று காலை, அன்பு வேலை செய்து வரும் விருகம்பாக்கத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்று அன்புவிடம் பேச முற்பட்ட போது, அன்பு தகாத வார்த்தைகளால் பேசி, கீழே கிடந்த செங்கல்லால் அப்பெண்ணை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பாதிக்கப்பட்ட அப்பெண், 5 விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

5 விருகம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய எதிரி அன்பு, வ/25, சாந்தி நகர், இராமாபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி அன்பு விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# விஜயகாந்த் 2ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிப்பு குழந்தைகளுக்கு கல்வி உபகரணம், அன்னதானம்



நெல்லை, டிச.30

2ம் ஆண்டு நினைவு குருபூஜை மாவட்ட இளைஞரணி அலுவலகத்தில் குழந்தைகளுக்கு கல்வி உபகரணம், அன்னதானம் செயலாளர் ஏரல் அரியபுரம் இசக்கி முத்து வழங்கினார்.

நடிகரும் தேமுதிக தலைவருமான விஜயகாந்த், கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் 28ம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது உடல் கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இன்று, 2ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்தின் நினைவிடத்தில் பொதுச்செயலாளர் பிரேமலதா மற்றும் தேமுதிக தொண்டர்களும் ரசிகர்களும் நீண்ட வரிசையில் காத்திருந்து அஞ்சலி செலுத்தினர். நினைவு தினத்தை தேமுதிக குருபூஜையாக அனுசரித்து வருகிறது.

தூத்துக்குடி மாவட்ட இளைஞரணி அலுவலகத்தில் செயலாளர் ஏரல் அரியபுரம் இசக்கிமுத்து தலைமையில் ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றிய பிரதிநிதி ஏரல் பூக்கடை கண்ணன் முன்னிலையில் விஜயகாந்தின் குருபூஜை அனுசரிக்கப்பட்டது.

இதில் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் மாவட்ட இளைஞரணி செயலாளர் ஏரல் அரியபுரம் இசக்கிமுத்து கடலூரில் தேமுதிக சார்பில் நடைபெறும் மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0 அழைப்பிதழை வழங்கினார். விழாவில் இளைஞரணி நிர்வாகிகள் சுடலையாண்டி, வாழை நடராஜன், கேப்டன் முருகன் மற்றும் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# 8-வது சுற்று தடுப்பூசி பணிகள் கலெக்டர் தொடங்கி வைத்தார்



சிவகங்கை, டிச.30

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியம், முசுண்டபட்டி கிராமத்தில், தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டத்தின் கீழ் 8 வது சுற்று தடுப்பூசிப் பணியினை, மாவட்ட கலெக்டர் கா.பொற்கொடி, துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழக அரசு கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில், கால்நடைகளின் நலன் காத்திடும் பொருட்டு, அதற்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசின் தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின் சார்பில், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக 8வது சுற்று கால் மற்றும் வாய் காணை நோய் (கோமாரி) தடுப்பூசி போடும் பணி, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக வருகின்ற 28.1.2026ஆம் தேதி வரை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது.

எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முசுண்டப்பட்டி கிராமத்தில் 250 மாட்டினங்கள் பயன்பெறும் வகையில், தடுப்பூசி செலுத்தும் பணியானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனை கால்நடை வளர்ப்போர் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாமினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு, அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக கோமாரி தடுப்பூசியினை செலுத்தி, உங்கள் கால்நடை செல்வங்களை கோமாரி நோயிலிருந்து பேணி பாதுகாத்திட வேண்டும் என மாவட்ட கலெக்டர் கா.பொற்கொடி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் மரு. நந்தகோபால், துணை இயக்குநர் (கால்நடை பெருக்கம் (ம) தீவன அபிவிருத்தி) கிரிஜா, துணை பதிவாளவர் (பால் வளம்) செல்வம், உதவி இயக்குநர்கள் ஸ்ரீசாயி (கால்நடை நோய் புலனாய்வுப்பிரிவு), மரு.தங்கமுத்து (கால்நடை பராமரிப்புத்துறை), உதவி பொது மேலாளர் (ஆவின்) .நாச்சியப்பன், கால்நடை உதவி மருத்துவர்கள் கார்த்தி (கால்நடை மருந்தகம், புழுதிபட்டி), சரண்யா (கால்நடை மருந்தகம், எஸ்.புதூர்), கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து காண்டனர்.

# பயணிகளின் பாதுகாப்பு நலன்கருதி, செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க ஓட்டுநர்கள் கையெழுத்திட்டு உறுதி மொழி ஏற்பு



திண்டுக்கல், டிச.30

திண்டுக்கல் மாவட்டம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகம் திண்டுக்கல் மண்டலம் (திண்டுக்கல், தேனி) பயணிகளின் பாதுகாப்பு நலன்கருதி, செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க ஓட்டுநர்கள் கையெழுத்திட்டு உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

தமிழ்நாடு அரசுப் போக்குவத்துக்கழகம் திண்டுக்கல் மண்டலம் (திண்டுக்கல், தேனி) பயணிகளின் பாதுகாப்பு நலன்கருதி, செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க ஓட்டுநர்கள் கையெழுத்திட்டு கீழ்கண்ட உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். பணியின் போது பயணிகளின் பாதுகாப்பு கருதி எந்த ஒரு நிலையிலும் செல்போன் பயன்படுத்த மாட்டேன் என உறுதி அளிக்கிறேன். பணியின் போது செல்போன் உபகரணங்களாகிய புளூடூத் வயர் ஹெட் போன் ஆகியவற்றை பயன்படுத்தமாட்டேன் என உறுதி அளிக்கிறேன். பேருந்துகளில் ஒலிபெருக்கி மூலம் பயணிகளுக்கு அசௌகர்யம் ஏற்படுத்தும் வகையில் எந்த உபகரணங்களையும் பயன்படுத்தமாட்டேன் என உறுதி அளிக்கிறேன். கவன சிதறல்களை ஏற்படுத்தும் வகையில் பயணிகளிடம் பேசிக் கொண்டே பேருந்தை இயக்கமாட்டேன் என உறுதி அளிக்கிறேன். பேருந்தை தடத்தில் இயக்கும் போது பயணிகள் ஏறி இறங்கும் கதவுகளை அடைத்து பாதுகாப்பாக பேருந்தை /இயக்குவேன் என உறுதி அளிக்கிறேன். அவ்வப்போது பேருந்துகளில் ஏற்படும் குறைபாடுகளை ஓட்டுனர்கள் பதிவேடுகளில் பதிவிட்டு அதனை முழுமையாக பராமரிப்பு பணியாளர் மூலம் சரிசெய்து கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உறுதி அளிக்கிறேன்.

பேருந்து நிலையங்களில் அவ்வப்போது டயர்களின் காற்றழுத்தம் சரியாக உள்ளதா எனவும் மற்றும் டயர் பட்டன்களில் உள்ள சிறு கற்களை அகற்றி டயர் சேதங்களை தவிர்த்து இதன் காரணமாக ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பேன் எனவும் உறுதி அளிக்கிறேன் என அனைத்து வாகன ஓட்டுநர்களும் பணி பாதுகாப்பு கருதி உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



இராமநாதபுரம், டிச.30

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 315 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் சமூகநீதி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களின் திறன்களை ஊக்குவிக்கும் பொருட்டு களமாடு பல்திறன் போட்டிகள் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 82 மாணாக்கர்கள் பங்கேற்று வெற்றி பெற்றதையொட்டி, மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பரிசு பொருட்களை காண்பித்து வாழ்த்து பெற்றுச்சென்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டவருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன், மாவட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, நேர்முக உதவியாளர் (நிலம்) ரகுபதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட

# கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கலெக்டர் துவக்கி வைத்தார்



தென்காசி, டிச.30

தென்காசி மாவட்டம் தென்காசி ஊராட்சி ஒன்றியம் சுமைதீர்த்தபுரம் ஊராட்சி கொட்டாகுளம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் மூலம் கோமாரி நோய் தடுப்பபூசி முகாம் இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டு சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம். பாதிக்கப்பட்ட மாடுகளில் மலட்டுத்தன்மையும், இரத்த சோகையும் ஏற்படும். பாதிக்கப்பட்ட பசுக்களில் கன்றுகளை பால் குடிக்க விடக்கூடாது, அவ்வாறு குடித்தால் கன்றுகள் உடனடியாக இறக்க நேரிடும். சிறந்த பராமரிப்பும், தடுப்பூசி போடுவதும் இந்நோயினை தடுக்க உகந்த வழியாகும் தென்காசி மாவட்டத்தில் உள்ள 126320 பசு இனங்களுக்கும், 6892 எருமை இனங்களுக்கும் கோமாரி தடுப்பூசி போடும் பணியில் 61 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கால்நடை மருத்துவமனைகளில் உள்ள கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட 61 குழுக்கள் அமைக்கப்பட்டு இன்று 29.12.2025 முதல் 18.01.2026 வரை 21 நாட்களுக்கு தடுப்பூசிப்பணி இலவசமாக மேற்கொள்ளப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படும். இத்தடுப்பூசிப்பணி நான்கு மாதத்திற்கு மேல் உள்ள கன்றுகளுக்கும் மற்றும் நிறை மாத சினை இல்லாத மாடுகளுக்கும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை போடப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தங்களது கிராமத்தில் எந்த நாட்களில் தடுப்பூசி பணி நடைபெறும் என்ற விவரம் முன்கூட்டியே சம்மந்தப்பட்ட கால்நடை மருந்தகத்தால் அக்கிராமத்திற்கு தெரிவிக்கப்படும் அல்லது பொது மக்கள் தங்கள் பகுதி கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொண்டு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் போடும் நாளில் விவசாயிகள் கால்நடை பராமரிப்புத்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி தவறாது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் கோவில்ராஜா, உதவி இயக்குநர் மரு.வாசுதேவன், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.அருண்குமார், மரு.ராதாகிருஷ்ணன், மரு.கனகராஜ், மரு.விஷ்ணு மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அயன்கொல்லங்கொண்டான் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்

# 8வது கால்நோய், வாய்நோய் தடுப்பூசி பணி மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்கள்



கன்னியாகுமரி, டிச.30

கன்னியாகுமரி மாவட்ட கால்நடை பாரமரிப்பு துறை சார்பில் பீமநகரி ஊராட்சிக்குட்பட்ட வேம்பத்தூர் பகுதியில் 8வது சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணியினை மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா துவக்கி வைத்து, தெரிவிக்கையில் கால்நோய், வாய்நோய் ஆனது பிளவுப்பட்ட குளம்புள்ள கால்நடை இனங்களான பசு மற்றும் எருமைகளுக்கு பரவும் நோயாகும். இந்நோய் தாக்கப்படும் கால்நடைகளுக்கு காய்ச்சல், பசியின்னை, அதிக அளவு உமிழ்நீர் சுரப்பு, கால், வாய் மற்றும் மடிக்காம்புகள் இவற்றில் கொப்பளங்கள் ஏற்படும். இது காற்றில் பரவும் நோய் ஆகும். இதனால் நோய் தாக்கப்பட்ட கால்நடைகளில் பால் உற்பத்தி குறைந்து பொருளாதார இழப்பு ஏற்படும். நோய் தாக்கப்பட்ட பசுக்களில் பால் அருந்தும் கன்றுகள் இறக்க நேரிடும். இந்த நோயிலிருந்து கால்நடைகளை காத்திட தடுப்பூசி போடுவது ஒன்றே சிறந்த வழியாகும்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 7 சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணிகள் நடந்துள்ளது. தற்போது 8வது சுற்று கால்நோய் வாய்நோய் தடுப்பூசி பணி இன்று (29.12.2025) முதல் 28.01.2026 வரை நடைபெற உள்ளது. 8வது சுற்றில் சுமார் 58,700 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டிட இலக்கு நிர்ணயித்து கால்நடை பராமரிப்புத்துறை செயல் திட்டம் வகுத்துள்ளது. நமது மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையை சார்ந்த கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர்களை கொண்ட 52 குழுக்கள் அமைக்கப்பட்டு, இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கால்நோய் வாய்நோயினால் தங்களுக்கு ஏற்படும் உற்பத்தி இழப்பை தடுத்திட இவ்வாய்ப்பினை பயன்படுத்தி, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களிடம் உள்ள நான்கு மாத வயதிற்கு மேலான அனைத்து பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போட்டு கொள்ள கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் கால்நடை பாராமரிப்புத்துறை மரு.முகம்மது கான், கால்நடை மருத்துவர்கள், செவிலியர்கள், துறை அலுவலர்கள், கால்நடை விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# அரசு போக்குவரத்து கழகம் கம்பம் கிளை சார்பில் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்கள் உறுதிமொழி




கம்பம், டிச. 30

திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் உத்தரவின் பேரில் தேனி மாவட்டம் கம்பம் அரசு போக்குவரத்து கழக கிளை சார்பில் கிளை மேலாளர்கள் பிரேமானந்த், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் பயணிகள் பாதுகாப்பு கருதி ஓட்டுநர்கள், நடத்துனர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு ஓட்டுநர்கள் அதற்கான படிவத்தில் கையெழுத்திட்டனர்.

இதில் பணியின் போது பயணிகள் பாதுகாப்பு கருதி செல்போன் மற்றும் புளூடூத், வயர் ஹெட் போன் பயன்படுத்த மாட்டேன், பேருந்துகளில் ஒலி பெருக்கி மூலம் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் எந்த ஒரு உபகரணங்களையும் பயன்படுத்த மாட்டேன்.

மேலும் கவன சிதறல்கள் ஏற்படும் விதமாக பயணிகளிடம் பேசிக்கொண்டு பேருந்தை இயக்க மாட்டேன், பயணிகள் ஏறி, இறங்கும் கதவுகளை அடைத்து பாதுகாப்பாக பேருந்தை இயக்குவேன், அவ்வப்போது பேருந்துகளில் ஏற்படும் குறைபாடுகளை அதற்கான பதிவேட்டில் பதிவு செய்து சரி செய்ய நடவடிக்கைகள் எடுப்பேன்.

மற்றும் டயர்களின் காற்றழுத்தம் சரியாக உள்ளதா எனவும், டயர் பட்டன்களில் சிக்கி இருக்கும் சிறு கற்களை அகற்றி டயர் சேதங்களையும், விபத்துகளையும் தவிர்ப்பேன் என உறுதி மொழி எடுத்துக் கொண்டு அதற்கான படிவத்தில் கையெழுத்திட்டனர்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
30.12.2025

# திருப்பூர் மாநகராட்சி பத்தாவது வார்டில் மழை நீர் வடிகால் பணிகளை கவுன்சிலர் துவக்கி வைத்தார்



திருப்பூர் மாநகராட்சி பத்தாவது வார்டில் பிரேமலதா கோட்டாபாலு அவர்கள் பத்தாவது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை வசதி மின் விளக்கு குடிநீர் வசதி மற்றும் மழை நீர் வடிகால்கள் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு மாநகராட்சி நிதியில் செய்து வருகிறார் அந்த வகையில் தற்போது திருப்பூர் மாநகராட்சி ஒன்றாவது மண்டலம் பத்தாவது வார்டு சௌபாக்கியா நகர் மற்றும் மாரியம்மன் கோவில்

வீதிகளில் ரூ 30 லட்சம் (ரூபாய் முப்பது லட்சம்) செலவில் மழை நீர் வடிகால் கால்வாய்கள் கட்டுவதற்கு பத்தாவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி பிரேமலதா கோட்டாபாலு அவர்கள் தலைமையில் பூமி பூஜை போடப்பட்டது இந்த நிகழ்வில் முன்னாள் கவுன்சிலரும் வடக்கு மாநகர திமுக அயலக அணி பொறுப்பாளருமாகிய கோட்டாபாலு அவர்களும் திமுக நிர்வாகிகள் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (28.12.2025) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரத்தில் உள்ளமாவீரன்பொல்லான்அரங்கத்தில்உள்ளஅன்னாரின்திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திரு.திப்பம்பட்டி ஆறுசாமி, தூய்மை பணியாளர் நல வாரிய துணை தலைவர் திருமதி.கனிமொழி, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி அ.சுஜாதா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி சிந்துஜா உள்பட பலர் உள்ளனர்.

# நாட்றம்பள்ளி பகுதியில் 3 நியாய விலை கடை க . தேவராஜ் எம் எல் ஏ திறந்து வைத்தார்



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி தாலுக்கா நாயனசெருவு ஊராட்சி கௌரன் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் 2023 2025 ரூ13.56 லட்சம் மதிப்பீட்டில் முழு நேர நியாய விலை கடை மற்றும் கத்தாரி ஊராட்சி பள்ளத்தூர் கிராமத்தில் ரூ 8,30 லட்சம் மதிப்பிடிலும் நியாய விலைகடைகட்டப்பட்டுதிறப்புவிழாநாயனசெருவு ஊராட்சி மன்ற தலைவர் அஸ்வினி தேசிங்கு ராஜா கத்தாரி ஊராட்சி மன்ற தலைவர் அனிதா மோகன் தலைமையில்நடைபெற்றது.சிறப்புஅழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க. தேவராஜ் கலந்துகொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரிப்பின் வெட்டி திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர் சூர்யா குமார் நாட்றம்பள்ளி ஒன்றிய குழு தலைவர் வெண்மதிமுனிசாமி ஒன்றிய குழு துணை தலைவர் தேவராஜ் மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் சிங்காரவேலன் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் மஞ்சுளா ஒன்றே குழு உறுப்பினர் சந்தோஷ் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி. அமித் இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.12.2025) மண்டலம்2, வார்டு7, போயம்பாளையம் பகுதியில் உள்ள ராஜா நகர் வீதியில் உள்ள வீடுகளில் பொது மக்கள்குப்பைகளைமக்கும்குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்குவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (30.12.2025)




திடீர் பணவரவு உண்டாகும். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சி கைகூடும்.




உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். நிலுவையில் உள்ள வேலைகள் முடியும்.




தொழில் வளர்ச்சி அபாரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.




இன்று அலைச்சல் அதிகமாக இருக்கும். கடன் சுமை குறித்து கவலைகள்வரலாம்.மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுங்கள்




சந்திராஷ்டமம் என்பதால் புதிய முயற்சிகளைத்தவிர்க்கவும்.வாகனப் பயணத்தில் கூடுதல் கவனம் தேவை. பொறுமை அவசியம்.




பேச்சாற்றலால் காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும்.




பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். புதிய பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.




துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.




உறவினர்களுடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வீட்டைப் பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வீர்கள். மனநிம்மதி கிடைக்கும்.




வருங்காலம் குறித்த திட்டங்களை வகுப்பீர்கள்.தந்தையின்உடல்நலம் சீராகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.




முயற்சிகளில் வெற்றி கிட்டும். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. நிதானமாகச் செயல்படவும்.




புதிய பொறுப்புகள் தேடி வரும். உயர் பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுப செய்திகள் வரும்.

# தெற்கு ஆசிய கராத்தே போட்டிஆவடி மாணவர்கள் சாதனை




கோவாவில் உள்ள பரிகார் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தெற்கு ஆசிய கராத்தே போட்டியில்

இந்தியா, நேபால், ஸ்ரீலங்கா,பூட்டான், பங்களாதேஷ் , சீனா ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட கராத்தே வீரர்கள் கலந்து கொண்டனர்.அதில் இந்திய நாடு திருவள்ளூர் மாவட்டம் தமிழ்நாடு சென்னை ஆவடியில் இயங்கிவரும் சேப்பா அகாடமி பயிற்சி பள்ளியின்தலைமை பயிற்சியாளர்கள் மாஸ்டர் டாக்டர் எஸ்.ராஜா மற்றும் மாஸ்டர் டாக்டர் என்.சங்கீதா ஆகியோர் தலைமையில் கராத்தே வீரர்கள் கட்டா மற்றும் குமிதே பிரிவுகளில் கலந்து கொண்டு 8 தங்கம், 6 வெள்ளி, 2வெண்கலம் பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர். தெற்கு ஆசிய அளவில் பதக்கங்கள் வென்ற கராத்தே வீரர்களை சக கராத்தே மாஸ்டர்கள், பெற்றோர்கள் வெகுவாக பாராட்டி வாழ்த்தினர்.

# 'அதனால்தான் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை' பிரபாஸ்



இந்திய அளவில் முன்னணி நடிகரான பிரபாஸ், அடுத்து 'தி ராஜா சாப்' படத்தில் நடித்துள்ளார். இந்த ஹாரர்நகைச்சுவை திரைப்படத்தை மாருதி இயக்கியுள்ளார். பீப்பிள் மீடியா பேக்டரி தயாரித்துள்ள இந்தப் படத்தில் மாளவிகா மோகனன், நிதி அகர்வால் மற்றும் ரித்தி குமார் ஆகியோர் கதாநாயகிகளாக நடித்திருக்கின்றனர்.

சஞ்சய் தத், போமன் இரானி, ஜரினா வஹாப் மற்றும் சமுத்திரக்கனி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். தமன் இசையமைத்துள்ளார். இப்படம் தமிழில் ஜனவரி 10ம் தேதி வெளியாகிறது. மற்ற மொழிகளில் 9ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில், நேற்று இப்படத்தின் பிரீ ரிலீஸ் நிகழ்ச்சி நடந்தது. அப்போது தொகுப்பாளினி, பிரபாஸிடம் ஒரு சுவாரஸ்யமான கேள்வியை கேட்டார். ஒரு ரசிகர், "பிரபாஸை மணக்க விரும்பினால் எப்படி இருக்க வேண்டும்?" என்று எழுதப்பட்ட ஒரு பதாகையைக் காட்டினார். அவர் அதே கேள்வியை பிரபாஸிடம் கேட்டார். அதற்கு பிரபாஸ் ஒரு அதிர்ச்சியூட்டும் பதிலைக் கொடுத்தார். "அந்த உண்மை தெரியாமல்தான் நான் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை" என்று கூறினார்.

# ரஜினியுடன் 'முதல் மரியாதை'போல ஒரு படம்...மனம் திறந்த 'பராசக்தி' பட இயக்குனர்




சுதா கொங்கரா இயக்கத்தில் தற்போது உருவாகியுள்ள படம் 'பராசக்தி'. இதில், சிவகார்த்திகேயன், ஸ்ரீலீலா, அதர்வா மற்றும் ரவி மோகன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில், சமீபத்தில் ஒரு பேட்டியில், ரஜினிகாந்துடன் பணியாற்ற விரும்புவதாக இயக்குனர் சுதா கொங்கரா தெரிவித்தார். தான் ரஜினியின் மிகப் பெரிய ரசிகை என்றும், முதல் மரியாதை (1985) படத்தைப் போலவே அவருடன் ஒரு முழுமையான காதல் படத்தை இயக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

'பராசக்தி' படத்தை டான் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் ஜனவரி 10ம் தேதி திரைக்கு வர உள்ளது.

# பழம்பெரும் பிரெஞ்சு நடிகை காலமானார் ரசிகர்கள் இரங்கல்



பழம்பெரும் பிரெஞ்சு நடிகை பிரிகிட் பார்டொட் (வயது 91). இவர் 1952ம் ஆண்டு முதல் 1973 வரை பிரெஞ்சு மொழியில் பல்வேறு படங்களில் நடித்து புகழ்பெற்றார். பின்னர், சினிமா துறையில் இருந்து விலகிய பிரிகிட் பார்டொட் விலங்குகள் நல ஆர்வலராக திகழ்ந்தார்.

இந்நிலையில், நடிகை பிரிகிட் பார்டொட் இன்று காலமானார். வயது மூப்பு, உடல்நலக் குறைவு காரணமாக பிரிகிஎட் பார்டொட் இன்று காலமானார். அவரது மறைவிற்கு ரசிகர்கள் உள்பட பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளர் ?



இந்திய கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் நடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை02 என்ற கணக்கில் இழந்தது. இதில் கவுகாத்தியில் நடந்த 2வது டெஸ்டில் 408 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவின் மோசமான தோல்வி இதுவாகும்.

கடந்த ஆண்டு நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் 03 என்ற கணக்கில் முதல்முறையாக பறிகொடுத்தது. உள்நாட்டில் அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்தியா டெஸ்ட் தொடரை தாரைவார்த்தது கடந்த 40 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் பணியாற்றுகிறார். அவரது பயிற்சியின் கீழ் வெள்ளை நிற பந்து கிரிக்கெட்டில் இந்திய அணி பிரமாதமாக செயல்பட்டு வருகிறது. ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி சரிவுக்குள்ளாகி இருக்கிறது.

இந்த நிலையில், இந்திய டெஸ்ட் அணிக்கு மட்டும் பயிற்சியாளராக, கம்பீருக்கு பதிலாக முன்னாள் வீரர் வி.வி.எஸ்.லட்சுமணை பிசிசிஐ அணுகியதாகதகவல்கள் வெளியாகின.

ஆனால் இந்த தகவலை பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைக்யா மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

'டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணிக்கு புதிய பயிற்சியாளரை நியமிக்க இந்திய கிரிக்கெட் வாரியம் முயற்சித்து வருவதாக பரவும் செய்திகள் முற்றிலும் தவறானவை. யூகத்தின் அடிப்படையிலானது. அதில் துளியும் உண்மையில்லை. 2027ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிவரை கம்பீரின் ஒப்பந்தம் உள்ளது. ஒப்பந்தபடி தொடருகிறார்' என்றார்.

# 4வது டி20 போட்டி: இலங்கையை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த 3 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 4வது டி20 போட்டி இன்று திருவானந்தபுரத்தில் நடைபெற்றது.

அதில் டாஸ் வென்ற இலங்கை அணியின் கேப்டன் சமாரி அத்தபத்து பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீராங்கனைளாக ஸ்மிருதி மந்தனா, ஷபாலி வர்மா ஆகியோர் களமிறங்கினர்.தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடினர். தொடர்ந்து பொறுப்புடன் ஆடி ரன்கள் குவித்தனர். பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்ட இருவரும் அரைசதம் கடந்தனர். ஸ்மிருதி மந்தனா 80 ரன்களும், ஷபாலி வர்மா 79 ரன்களும் எடுத்தனர். பின்னர் களமிறங்கிய ரிச்சா கோஷ் 40 ரன்களும், கேப்டன் ஹர்மன் பிரீத் கவுர் 16 ரன்களும் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 221 ரன்கள் எடுத்தது. இதனைத்தொடர்ந்து 222 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணியின் சார்பில் ஹாசினி பெரேரா மற்றும் கேப்டன் அத்தபத்து ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். இந்த ஜோடியில் ஹாசினி பெரேரா 33 ரன்களில் வெளியேற, மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அத்தபத்து 52 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய இலங்கை அணி வீராங்கனைகள் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து வெளியேறினர். இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 191 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்திய அணியின் சார்பில் அருந்ததி ரெட்டி மற்றும் வைஷ்ணவி சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதன்மூலம் இலங்கை அணியை 30 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இதன்படி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 40 என்ற புள்ளிக்கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது.

# மகளிர் கிரிக்கெட்டில் முக்கிய மைல்கல்லை எட்டிய ஸ்மிருதி மந்தனா

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது.இதில் நடந்து முடிந்த 3 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 4வது டி20 போட்டி இன்று திருவானந்தபுரத்தில் நடைபெறுகிறது. இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது அதில் டாஸ் வென்ற இலங்கை அணியின் கேப்டன் சமாரி அதபத்து பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீராங்கனைளாக ஸ்மிருதி மந்தனா, ஷபாலி வர்மா ஆகியோர் களமிறங்கினர்.

தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடினர். இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 221 ரன்கள் எடுத்தது.ஸ்மிருதி மந்தநா 80 ரன்களும், ஷபாலி வர்மா 79 ரன்களும் எடுத்தனர்.பின்னர் ரிச்சா கோஷ் 40 ரன்கள் எடுத்தார். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 221 ரன்கள் எடுத்தது.

இந்த நிலையில், இந்த போட்டியில் 80 ரன்கள் எடுத்ததால் ஸ்மிருதி மந்தனா புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் அதிவேகமாக 10,000 ரன்களைக் கடந்த வீராங்கனை என்ற சாதனையை படைத்தார் ஸ்மிருதி மந்தனா. மேலும், 10,000 ரன்களைக் கடந்த 4வது வீராங்கனை ஆனார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kilpauk Garden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066